செய்தி வெளியீடு எண்:399 நாள் : 06.08.2016

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 5.8.2016 அன்று தலைமைச் செயலகத்தில், சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் 4 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 'ஸ்பெக்ட்–சிடி' (Single Photon Emission Computed Tomography – SPECT-CT) மருத்துவக் கருவியின் சேவையை காணொலிக் காட்சி (Video Conferencing) மூலமாக துவக்கி வைத்தார்கள். மேலும் 70 கோடியே 69 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவத் துறை கட்டடங்கள், 14 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை திறந்து வைத்து, அரியலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையில் 2 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள சி.டி. ஸ்கேன் கருவியின் சேவையை துவக்கி வைத்தார்கள்.

ஏழை எளிய மக்களுக்கு, உயர்தர மருத்துவ வசதிகள் தங்கு தடையின்றி கிடைக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில், அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனைகளின் உட்கட்டமைப்பு வசதிகளை வலுப்படுத்துதல், புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களைத் தோற்றுவித்தல், மருத்துவர்கள், மருத்துவம் சார்ந்த மற்றும் மருத்துவம் சாராத பணியாளர்களை நியமித்தல், எளிதில் செல்லமுடியாத பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு அவர்களின் இல்லங்களுக்கு அருகிலேயே தரம் வாய்ந்த மருத்துவ வசதி கிடைக்க வழிவகை செய்தல், தொழில்நுட்ப வளர்ச்சியினை பயன்படுத்தி உயர்தர மருத்துவ வசதிகளை அளித்தல், அம்மா குழந்தை நல பரிசுப் பெட்டகம், அம்மா மகப்பேறு சஞ்சீவி, அம்மா முழு உடல் பரிசோதனைத் திட்டம், அம்மா மகளிர் சிறப்பு முழு உடல் பரிசோதனைத் திட்டம், மகளிர் சுகாதாரத் திட்டம் போன்ற பல முன்னோடித் திட்டங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு செயல்படுத்தி வருகிறது.

ஏழை எளிய மக்களுக்கு, தனியார் மருத்துவமனைகளுக்கு இணையான உயர்தர மருத்துவ சேவை கிடைத்திட வேண்டும் என்ற உயரிய நோக்கில் கடந்த 5 ஆண்டுகளில் 968 கோடி ரூபாய் செலவில் புதிய மருத்துவ கருவிகள் அரசு மருத்துவமனைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த வகையில், சென்னை ஓமந்தூரார் அரசினர் தோட்ட

வளாகத்தில் அமைந்துள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிகிச்சை மருத்துவமனையில் 4 கோடியே 80 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 'ஸ்பெக்ட்–சிடி' கருவியின் சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் காணொலிக் காட்சி மூலமாக துவக்கி வைத்தார்கள்.

அரசு மருத்துவமனையில் முதன்முறையாக நிறுவப்பபட்டுள்ள இக்கருவியின் உதவியால் இதயம், நுரையீரல், மூளை–நரம்பு, கல்லீரல், எலும்பு, சிறுநீரகங்கள் ஆகிய உறுப்புகளை பாதிக்கும் நோய்கள் மற்றும் புற்றுநோயால் உடலில் ஏற்படும் மாற்றங்களை முதலிலேயே கண்டறிந்து நோயாளிகளுக்கு உரிய சிகிச்சை அளிக்க முடியும். இதன்மூலம், தனியார் மருத்துவமனைகளில் மட்டுமே இருந்த அணுக்கரு மருத்துவ வசதி, இனி ஏழை எளிய மக்கள் தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் பெறும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**இந்தியாவிலேயே தலை சிறந்த ஆய்வுக் கூடங்களில் ஒன்றான சென்னை, கிண்டி கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் பாம்பு, விஷ முறிவு மருந்து உற்பத்தி கடந்த 2000–ஆம் ஆண்டு முதல் நிறுத்தப்பட்டிருந்தது. இந்த பாம்பு, விஷ முறிவு மருந்து உற்பத்திக்கு புத்துயிர் அளித்து அங்கு தடுப்பு ஊசி உற்பத்தியை தொடங்கும் நோக்குடன் தற்போது சென்னை, கிண்டி கிங் நோய் தடுப்பு மருந்து மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 16 கோடியே 72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள பாம்பு விஷ முறிவு மருந்து உற்பத்தி பிரிவு, தரக் கட்டுப்பாடு மற்றும் தர உறுதி பிரிவு மற்றும் குருதி பகுப்பாய்வு பிரிவு கட்டடங்கள்;**

செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் சி.ஆர்.ஆர்.ஐ. பயிற்சி மருத்துவ மாணவ, மாணவியருக்கு 6 கோடியே 89 லட்சத்து 70 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவர் குடியிருப்பு கட்டடங்கள்;

திருவள்ளூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, நாகப்பட்டினம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, தூத்துக்குடி மாவட்டம் – கோவில்பட்டி அரசு தலைமை மருத்துவமனை, அரியலூர் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, தஞ்சாவூர் மாவட்டம் – கும்பகோணம் அரசு தலைமை மருத்துவமனை, இராமநாதபுரம் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை, தூத்துக்குடி மாவட்டம் – ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனை ஆகிய அரசு மருத்துவமனைகளில் 21 கோடியே 57 லட்சம் ரூபாய்

மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள தீக்காய சிகிச்சைப் பிரிவு, விஷ முறிவு சிகிச்சைப் பிரிவு, நவீன சலவையகம், நவீன சமையலறை, மருந்து மற்றும் உபகரணங்கள் சேமிப்பு பிரிவு, திருவள்ளூர் மாவட்ட சுகாதாரப் பணிகள் இணை இயக்குநர் அலுவலகம், யோகா மற்றும் இயற்கை மருத்துவ வாழ்வியல் முறை சிகிச்சை பிரிவு, தொற்றா நோய் பிரிவு, மகப்பேறு பிரிவு, ஒருங்கிணைந்த புற நோயாளிகள் பிரிவு, அறுவை சிகிச்சை மற்றும் தீவிர சிகிச்சை பிரிவு, தலைக்காய சிகிச்சை பிரிவு, ரத்த வங்கி, தீவிர இருதய சிகிச்சை பிரிவு, 24 படுக்கைகள் கொண்ட ஆண்கள் மற்றும் பெண்கள் பிரிவு, 100 படுக்கைகள் கொண்ட பொது பிரிவு கட்டடங்கள்;

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை சார்பில் 25 கோடியே 51 லட்சத்து 25 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள 10 மேம்படுத்தப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள், 16 ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு புதிய கட்டடங்கள், 17 துணை சுகாதார நிலைய கட்டடங்கள், 7 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டப்பட்டுள்ள மகப்பேறு பிரிவு கட்டடங்கள், 9 ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டப்பட்டுள்ள செவிலியர்களுக்கான குடியிருப்புகள், நீலகிரி மாவட்டம் – எம். பாலாடா ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்டுள்ள மருத்துவ அலுவலர் குடியிருப்பு, விருதுநகர் மாவட்டம், சுகாதாரப் பணிகள் துணை இயக்குநர் அலுவலகத்தில் கட்டப்பட்டுள்ள தடுப்பூசி மருந்து கிடங்கு, வேலூர் மாவட்டம்– பாணாவரம் ஆரம்ப சுகாதார நிலையம் மற்றும் விழுப்புரம் மாவட்டம் – வளத்தி ஆரம்ப சுகாதார நிலையம் ஆகிய இடங்களில் கட்டப்பட்டுள்ள ஆய்வக விரிவாக்க கட்டடங்கள், விழுப்புரம் மாவட்டம் – ஒலக்கூர் மற்றும் கிளியனூர் ஆரம்ப சுகாதார நிலையங்களில் கட்டப்பட்டுள்ள பார்வை மைய கட்டடம், வேலூர் மாவட்டம் – பாணாவரம் ஆரம்ப சுகாதார நிலையத்தில் கட்டப்பட்டுள்ள தனிமைப்படுத்தப்பட்ட பிரிவு கட்டடங்கள்;

என மொத்தம் 70 கோடியே 69 லட்சத்து 95 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ள மருத்துவக் கட்டடங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

கோயம்புத்தூர் மாவட்டம் – செட்டிப்பாளையம், ஆனைக்கட்டி மற்றும் சோமையம்பாளையம், விழுப்புரம் மாவட்டம் – ஆரம்பூண்டி, நாமக்கல் மாவட்டம் – சோளக்காடு, நீலகிரி மாவட்டம் – அரவேனு மற்றும் தெப்பக்காடு (முதுமலை), திண்டுக்கல் மாவட்டம் – பூம்பாறை, கரூர் மாவட்டம் – அய்யம்பாளையம், தேனி

மாவட்டம் – குமணன்தொழு, வேலூர் மாவட்டம் – ஆத்தூர்குப்பம் (பரதகோயில்), புதுக்கோட்டை மாவட்டம் – வீரடிப்பட்டி, திருநெல்வேலி மாவட்டம் – திருவேங்கடம் மற்றும் திருப்பூர் மாவட்டம் – வெள்ளிரவேலி ஆகிய இடங்களில் புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 14 புதிய ஆரம்ப சுகாதார நிலையங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்கள்.

மேலும், அரியலூர் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் 2 கோடி ரூபாய் செலவில் நிறுவப்பட்டுள்ள சி.டி.ஸ்கேன் கருவியின் சேவையை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் துவக்கி வைத்தார்கள்.

இந்த நிகழ்ச்சியில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர், தலைமைச் செயலாளர் முனைவர் பா. இராம மோகன ராவ், இ.ஆ.ப, தமிழ்நாடு அரசு ஆலோசகர் திருமதி ஷீலா பாலகிருஷ்ணன், இ.ஆ.ப (ஓய்வு), மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் ஜெ. ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை சிறப்பு செயலாளர் டாக்டர் ப. செந்தில்குமார், இ.ஆ.ப., மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

* * * * * *

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை – 9.**
**நாள் : 6.8.2016**